இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 16.02.2026

# காந்தாரிகளின் கதறல்கள்!

மகாபாரதத்தில் குந்தியை நினைத்து காந்தாரி கதறியதைப் போல அரசியல் களத்தில் சில கயமைக் குரல்கள் கேட்கின்றன. அவர்களைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது.

**ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு 5 ஆயிரம் ரூபாயை வழங்கி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான முன்பணம் 3,000 ரூபாயைக் கொடுக்கச் சொல்லிவிட்டார் முதலமைச்சர். அத்தோடு கோடைக்காலச் சிறப்புத்தொகுப்பாக .2,000 ரூபாயும் கொடுக்கச் சொல்லி விட்டார். இதன்படி 1.31 கோடி மகளிருக்கு 5 ஆயிரம் ரூபாய் பிப்ரவரி 13 போய்ச் சேர்ந்துவிட்டது.**

1.31 கோடி மகளிர் இப்போது ஆயிரம் ரூபாயை மாதம் தோறும் உரிமைத் தொகையாக பெற்று வருகிறார்கள். **“திராவிட மாடல் 2.0 ஆட்சியில் உரிமைத்தொகையை ரூ.2 ஆயிரமாக உயர்த்தி வழங்குவோம்”** என்று அறிவித்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர்.

இது போன்ற திட்டங்களை முடக்க பா.ஜ.க. சதி செய்தது. இத்திட்டத்தை முடக்க நினைத்தவரின் சதியை முறியடித்து விட்டார் முதலமைச்சர்.

- ★ **ரூ.5 ஆயிரம் வரவு வைத்தது.**
- ★ **ரூ.2 ஆயிரம் என வாக்குறுதி அளித்தது.**
- ★ **திட்டத்தை முடக்கும் சதியை முறியடித்தது.**

மூன்று ஆகப்பெரும் செயல்களைச் செய்து விட்டார் முதலமைச்சர் அவர்கள். இதுதான் இவர்களைக் கதற வைக்கிறது.

அதைவிட முக்கியமாக யாருக்கும் முன்கூட்டியே தெரிய வாய்ப்பு இல்லாமல் ரகசியமாக இப்பணிகளை முடித்து விட்டார் முதலமைச்சர் அவர்கள். மகளிருக்கு வங்கிக் கணக்கில் பணம் போய்ச் சேர்ந்த பிறகுதான் அனைவருக்கும் தெரியும்.

‘தோல்வி பயம்’ என்கிறார் பழனிசாமி. எட்டு ஆண்டுகளாக நடந்த எல்லாத் தேர்தல்களிலும் வெற்றி பெற்று வரும் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அது வருமா? பத்துத் தேர்தல்களாக தோல்வியை மட்டுமே தழுவி வருபவர் பழனிசாமிதான். அவர்தான் முதலில் உரிமைத் தொகையாக ஆயிரம் ரூபாய் கொடுக்க முடியாது என்றார். ஏமாற்றிவிட்டார்கள், அல்வா கொடுத்துவிட்டார்கள் என்றார். கொடுக்கத் தொடங்கியதும் எல்லாருக்கும் கொடுக்கவில்லை என்றார். பின்னர், அவரே பொய்யான வாக்குறுதிகளைக் கொடுத்தார். இப்படி அவரைத் தூங்கவிடாமல் விரட்டிக் கொண்டிருந்ததுதான் கலைஞர் உரிமைத் தொகைத் திட்டம்.

**பா.ஜ.க.வின் சதியால் மூன்று மாதங்களுக்கு தடை போட நினைத்தார்கள். அதை முன்கூட்டியே தெரிந்து கொண்ட முதலமைச்சர் அவர்கள் முன்கூட்டியே ரூ.3 ஆயிரத்தை வழங்கிவிட்டார். ரூ.2 ஆயிரத்தை கோடைகால சிறப்பு நிதியாகவும் கொடுத்துவிட்டார். சமூக வலைத்தளத்தை திறந்தால் பல்லாயிரக் கணக்கான மகளிர் முதலமைச்சருக்குத்தான் பாமாலை தொடுத்து வருகிறார்கள். வள்ளல் என்றும் கடவுள் என்றும், மகாராசன் என்றும் புகழ்கிறார்கள் பெண்கள். அனைத்துப் பெண்களின் அன்பு மனிதராக ஆகிவிட்டார் முதலமைச்சர். ஐயோ பாவம், பழனிசாமி என்ன செய்வார்? அடிவயிற்றில் காந்தாரியைப் போல அடித்துக் கொள்கிறார். அதைத் தவிர என்ன செய்ய முடியும்?**

2019 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக கஜா புயல் ஏற்பட்டது. 2000 ரூபாய் தரப்போவதாக அன்றைய முதலமைச்சர் பழனிசாமி சொன்னார். தேர்தல் முடிந்த பிறகு 2000 ரூபாயை மறந்துவிட்டார் பச்சைப் புளுகு பழனிசாமி. அதைப் பற்றி வாயே திறக்கவில்லை.

கொரோனா காலத்தில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் கொடுங்கள் என்று அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னபோது, ‘அவ்வளவு பணம் எங்கே இருக்கிறது?’ என்று பழனிசாமி கேட்டார். தி.மு.க. ஆட்சி மலர்ந்ததும், 4 ஆயிரம் ரூபாயைக் கொடுத்தவர்தான் இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். 13 விதமான மளிகைப் பொருட்களையும் சேர்த்துக் கொடுத்தார். மனமிருந்தால் மார்க்கம் உண்டு என்று நிரூபித்தார் முதலமைச்சர் அவர்கள்.

பழனிசாமியை விடப் பெரிய பொய்யர்கள்தான் ஒன்றிய பா.ஜ.க.வினர். கொரோனா காலத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களை அவர்களது சொந்த ஊருக்குச் செல்ல பேருந்து கூட விடாத ஆட்சிதான் பா.ஜ.க. ஆட்சி.

**‘நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வெளிநாட்டில் இந்தியர்கள் பதுக்கி வைத்துள்ள கருப்புப் பணத்தை மீட்டு வந்து ஒவ்வொருவர் வங்கிக் கணக்கிலும் ரூ.15 லட்சம் போடுவோம்’ என்று சொன்னார்கள் மோடியும், அமித்ஷாவும். இதுவரை கருப்புப் பணத்தையும் மீட்கவில்லை. ரூ.15 லட்சமும் போடவில்லை. 15 ரூபாயைக் கூட போடவில்லை.**

இதைப் பற்றிக் கேட்டபோது ‘ஜூம்லா’ என்றார் உள்துறை அமைச்சர் அமித்ஷா. அதாவது ‘சும்மா சொன்னோம்’ என்று கூலாகச் சொன்னார் அமித்ஷா. இத்தகைய கூட்டம்தான் இப்போது முதலமைச்சரின் நடவடிக்கையைப் பார்த்து எரிச்சல் அடைகிறது.

**பொருளாதாரக் கவலை எல்லாம் பா.ஜ.க. கும்பலுக்கு வந்துள்ளது. லட்சம் கோடிகளை கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு தூக்கிக் கொடுத்த அரசு பா.ஜ.க. அரசு. அப்போது எல்லாம் இவர்களுக்கு அந்தக் கவலை வராது. கோடிகளில் கடன் வாங்கி, அதைக் கட்டாமல் வெளிநாட்டுக்கு தப்ப விடும் அரசு பா.ஜ.க. அரசு. அப்போது பொருளாதாரக் கவலை வராது. ஏழை எளிய பெண்களுக்கு, அன்றாடச் செலவுக்கு, அவசியமான செலவுகளுக்கு பணம் கொடுத்தால் உடனே, ‘கஜானா கவலை’ வந்துவிடுகிறது.**

**‘டெபாசிட் ஆவது வாங்குவோம்’ என்ற நினைப்பில் இருந்தனர் அ.தி.மு.க., பா.ஜ.க. உள்ளிட்டவர்கள். இப்போது அந்த டெபாசிட்டுக்கும் ஆபத்து வந்து விட்டது. அதனால்தான் கதறுகிறார்கள். கதறுங்கள். கதறட்டும்.**

●●

# மக்களோடு மக்களாக ரயிலில் முதல்வர் பயணம்!

## உற்சாகத்தில் பயணிகள்!

சென்னை, பிப். 16 –

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை அடுத்த மண்டலவாடி பகுதியில் நடந்த தி.மு.க. வாக்குச் சாவடி முகவர் மாநாட்டில் பங்கேற்பதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது இல்லத்தில் இருந்து புறப்பட்டு சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு வந்தடைந்தார். அவருக்கு திமுக தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்து பிருந்தாவனம்எக்ஸ்பிரஸ்ரயிலில் வழியனுப்பி வைத்த னர்.

அப்போது ரயில் பயணம் செய்த முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் ரயில் பயணம் செய்த பொதுமக்கள் குடும்பம், குடும்பமாக அவருடன் அமர்ந்து புகைப்படம் எடுத்து அவருக்கு வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டனர்.



மேலும் முக்கிய தலைவர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் மக்களோடு மக்களாக ரயிலில் பயணித்து சுமார் 11 மணியளவில் ஜோலார்பேட்டை ரயில் நிலையம் சென்றடைந்தார். அங்கும் அவருக்கு தி.மு.க. நிர்வாகிகள், அமைச்சர்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் உற்சாகமாக வரவேற்றனர்.

அதைத் தொடர்ந்து நீண்ட நாட்களுக்கு பிறகு ரயிலில் பயணம் செய்த வீடியோவை முதல்வர் மு.க.ஸ்டாலின் எக்ஸ்தளத்தில் வெளியிட்டுள்ளார். அந்த வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரலாக பரவுகிறது.

---

## வங்கிக் கணக்கில் ரூ.5 ஆயிரம் வரவு!

# வீடுகளின் முன் கோலமிட்டு முதல்வருக்கு பெண்கள் நன்றி!

சென்னை, பிப்.16 –

வங்கி கணக்கில் ரூ.5 ஆயிரம் பணம் செலுத்தியதற்காக வீடுகளின் முன்பாக கோலமிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பெண்கள் நன்றி தெரிவித்தனர். தமிழக அரசின் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் பயனாளிகளான 1 கோடியே 31 லட்சம் பெண்கள் வங்கி கணக்கில் திடீரென ரூ.5 ஆயிரம் பணம் வரவு வைக்கப்பட்டது.

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் வெளியிட்ட வீடியோவில், ‘இந்த பிப்ரவரி மாதம் மட்டுமில்லாமல் அடுத்த 2 மாதம் அதாவது மார்ச், ஏப்ரலுக்கான உரிமை தொகை தவணைகளையும் சேர்த்து 3 ஆயிரம் ரூபாயும், கூடுதலாக கோடைகால செலவுகளை கருத்தில் கொண்டு மேலும் 2 ஆயிரம் ரூபாய் சிறப்பு தொகையும் சேர்த்து, இந்த பிப்ரவரி மாதம் 5 ஆயிரம் ரூபாயைச் சிறப்பு மகளிர் உரிமை தொகையாக ஒரு கோடியே 31 லட்சம் பெண்களுக்கு வழங்க உத்தரவிட்டிருக்கேன்’ என்று கூறியிருந்தார்.




இதையடுத்து சென்னை அண்ணா அறிவாலயம் வந்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பெண்கள் உற்சாக வரவேற்பு அளித்து நேரில் நன்றி செலுத்தினர். பெண்கள் வரவேற்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் திகைத்து போனார்.

இந்நிலையில் முதல்வர் மு.க.ஸ்டாலினின் இந்த அதிரடி அறிவிப்புக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக தமிழகம் முழுவதும் பெண்கள் தங்கள் வீடுகளுக்கு முன்பாக கோலமிட்டு தங்களுடைய நன்றியை வெளிப்படுத்தினர்.

அந்த கோலத்தில் கலைஞர் உரிமை தொகை ரூ.5000 பெற்றுக் கொண்டோம். முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மிக்க நன்றி. ஸ்டாலின் தொடரட்டும். தமிழ்நாடு வெல்லட்டும். மகளிர் உரிமை தொகை, கோடைக்கால சிறப்பு நிதி ரூ.5000 தந்த தமிழ்நாடு முதல்வருக்கு நன்றி என்று வாசகம் இடம் பெற்றிருந்தது. ஒவ்வொருவரின் வீடுகளின் முன்பாகவும் இதுபோன்று கோலங்கள் போடப்பட்டிருந்தது. இன்னும் சில இடங்களில் முதல்வர் மு.க.ஸ்டாலின் படத்தை வரைந்து இருந்தனர். இது பார்ப்போரை வெகுவாக கவர்ந்தது.

---

## என் மகளுக்கு லேப்டாப் கொடுத்தார்கள்! எனக்கு

# மாதம் ரூ.1000 - இப்போது ரூ.5000 வந்துவிட்டது!

## வீடுதேடி வந்த முதல்வரிடம் பெண் நெகிழ்ச்சி!

திருப்பத்தூர், பிப் . 16 –

அரசு திட்டங்களால் எவ்வளவோ உதவியாக இருக்கிறது. என் பொண்ணுக்கு லேப்டாப் வந்து விட்டது. எனக்கு மாதம் 1000 ரூபாய் வருது... இப்போது ரூ.5000ம் வந்து விட்டது என வீடு தேடி வந்த முதல்வரிடம் பெண் ஒருவர் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை அருகே தி.மு.க. வடக்கு மண்டல வாக்குச்சாவடி முகவர்களுக்கு பயிற்சி மாநாடு நேற்று நடந்தது. இதில் திமுக தலைவரும், முதல்வருமான மு.க. ஸ்டாலின் கலந்து கொண்டார். முன்னதாக ரோடு ஷோவாக சென்ற முதல்வர் மு.க. ஸ்டாலின் சாலையோரம் இருபுறமும் திரண்டிருந்த மக்களை சந்தித்து கைகொடுத்து உற்சாகப்படுத்தினார். வழியில் ஜோலார்பேட்டை அடுத்த தாமலேரிமுத்தூர் பகுதியில் உள்ள ஒரு வீட்டிற்கு திடீரென சென்ற முதல்வர் மு.க. ஸ்டாலின் அங்கிருந்த குடும்ப தலைவி மேகலாவிடம் நலம் விசாரித்தார். பின்னர் மகளிர் உரிமை தொகை வருகிறதா? என்று கேட்டார். மேலும் அரசின் திட்டங்கள் குறித்து கேட்டறிந்தார்.



**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** மகளிர் உரிமை தொகை இப்ப வந்ததா? இல்ல முதலில் இருந்து வருகிறதா?

**குடும்பத் தலைவி மேகலா:** முதல்ல இருந்து வருது. என் பசங்க படிப்பு செலவுக்கு ஆகிறது.

**மு.க.ஸ்டாலின்:** இது யாரு?

**மேகலா:** என் மகள்.

**மு.க.ஸ்டாலின்:** பெயர் என்னம்மா?

**இளம்பெண்:** ராஜலட்சுமி

**மு.க.ஸ்டாலின்:** என்ன படிக்கிறாய்?

**இளம்பெண்:** காமர்ஸ் படிக்கிறேன்.

**மு.க.ஸ்டாலின்:** நல்ல படிக்கணும். மற்ற திட்டங்கள் என்ன வந்து கொண்டிருக்கிறது?

**மேகலா:** மாதம், மாதம் ஆயிரம் ரூபாய் வந்து கொண்டிருக்கிறது. மகளுக்கு லேப்டாப் கொடுத்திருக்கிறார்கள்.

**மு.க.ஸ்டாலின்:** ஓ அப்படியா..

**குடும்ப தலைவர்:** கடந்த வாரம் தான் லேப்டாப் கொடுத்தார்கள்.

**மு.க.ஸ்டாலின்:** அரசிடம் இருந்து இவ்வளவு சலுகை வருகிறதா உங்களுக்கு.

**மேகலா:** வருகிறதால் தான் எங்களுக்கு எவ்வளவோ உதவியா இருக்கிறது என மகிழ்ச்சியுடன் கூறினார்.

பின்னர், குடும்ப தலைவி தண்ணீர் கொடுக்க, அதை முதல்வர் மு.க.ஸ்டாலின் வாங்கி பருகினார். தொடர்ந்து அங்கிருந்தவர்கள், பொதுமக்களுடன் முதல்வர் செல்பி எடுத்தார்.

பின்னர், ஜோலார்பேட்டையிலிருந்து திருப்பத்தூர் செல்லும் வழியில், முதல்வர் மு.க. ஸ்டாலினை, ஏராளமான பெண்கள் சந்தித்து, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறும் மகளிருக்கு ரூ.5 ஆயிரம் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டதற்காகவும், திராவிட மாடல் 2.0 ஆட்சிக் காலத்தில், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்தமைக்காகவும் இனிப்புகளை வழங்கி நன்றி தெரிவித்தனர்.

இந்த நிகழ்வின்போது அமைச்சர்கள் எ.வ.வேலு, ஆர்.காந்தி, சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, எஸ்.ஜெகத்ரட்சகன் எம்பி, திருப்பத்தூர் மாவட்ட ஆட்சி தலைவர் சிவசவுந்தர வல்லி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.